Individual Copy

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திண்டுக்கல் மாவட்டம் – மருத்துவ இயலாமை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஊராட்சி செயலர் திரு.ஆர்.விஜயகோபால் என்பவரின் வாரிசுதாரர் / மனைவி திருமதி.வீ.ராம்பிரியா இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை**

**அரசாணை (3ப) எண்.14**

**நாள்:21.05.2021**
**பிலவ, வைகாசி 7,**
**திருவள்ளுவர் ஆண்டு–2052**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (4ப) எண்.44, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, நாள்:29.07.2020.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.637/2019/ஊ.வ.1 நாள்:03.09.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:26.02.2021.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.2511/2021/டி3, நாள்:08.04.2021.

* * * * *

**ஆணை:**

திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசபிள்ளைப்பட்டியில் ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து வந்த திரு.ஆர்.விஜயகோபால் என்பவர் மருத்துவ இயலாமை காரணமாக (Medically invalidated) 53 வயது கடந்த நிலையில், 09.10.2018 பிற்பகல் அன்று பணிஓய்வு பெற்றதால், அவரது மனைவி திருமதி.வீ.ராம்பிரியா என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்க அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:23.01.2020 பத்தி 4–ல் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையான, person whose legal heirs are eligible for compassionate ground appointment, Government Servants who retire on Medical Invalidation (within the age of 53) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58–ன்கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15 ஆகியவற்றைத் தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியர் கருணை அடிப்படைப் பணி நியமனத்திற்கான கல்வி மற்றும் இதர அனைத்துத் தகுதிகளையும் நிறைவு செய்யும்பட்சத்தில், திருமதி.வீ.ராம்பிரியா என்பவருக்குக் கருணை அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்க திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்துமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அரசாணை (4ப) எண்.44, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, நாள்:29.07.2020–ல் தெளிவுரை வழங்கி ஆணையிடப்பட்டது.

..2

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி திருமதி.வீ.ராம்பிரியா என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில் ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 03.09.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். மருத்துவ இயலாமையால் ஓய்வு பெற்ற திரு.ஆர்.விஜயகோபால் என்பவர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.வீ.ராம்பிரியா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 11.02.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 10.05.1986 என்றும், ஊராட்சி செயலர் மருத்துவ இயலாமை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளில் தனியரின் வயது 32 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 32 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 34 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து, மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.வீ.ராம்பிரியா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 03.09.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 30.04.2021 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.3126/டி.1/2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.14362/ஜி1/2021, நாள்:20.05.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15.
மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல் மாவட்டம்.
**நகல்:**
திருமதி.வீ.ராம்பிரியா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திண்டுக்கல் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்